விநாயகரின் முக்கிய உறுப்புகளிலே நம் கண்முன் முதன்மையாகத் தோன்றுவது அவருடைய பெருவயிறாகும். எல்லாவற்றையும் தன்னுள் அடக்குவதும், தன்னுள் எல்லாம் அடங்குவதுமாக விளங்குகின்ற பரம்பொருள் நிலையை, அந்த மாபெரும் விசுவரூப நிலையைப் பெருவயிறு உருவகிக்கிறது.

விநாயகருக்கு ஐந்து கரங்கள். கரங்கள் என்பன செயலின் உருவகம். அவருடைய கரத்திலே இருக்கும் பாசம் மனிதர்களின் பிறவிக்குக் காரணமாகிய பற்றுள்ளத்தைக் குறிக்கிறது. அதாவது பிறவிக்குக் காரணமாகி அதனைப் பிணித்து நிற்கிறது. இந்தப் பிணிப்பே பிறவிக்குத் தோற்றுவாய். ஆகவே அவருடைய பாசம் விளங்கும் கரமானது படைப்புத் தொழிலை குறிக்கிறது.

இன்னொரு கரத்திலே அங்குசத்தைக் காண்கிறோம். அங்குசமானது அழிக்கும் கருவி. ஆகையால் அங்குசம் ஏந்திய விநாயகரின் கரம் இறைவனுடைய அழிக்கும் தொழிலை உருவகிக்கிறது.

இன்னொரு கரம் 'அபயகரம்' என்னும் அமைந்த கரமாகும். இது தன்னை நாடி வருகின்ற தொண்டனை 'அஞ்சேல்' என்ற புகல் தருகிறது. பிறவியின் வினைச்சுழலிலே சிக்குண்டு தவிக்கும் பிறவிக்கு இந்தக் கரம் அஞ்சாமையை உணர்த்துகின்றது. ஆதலால் இதுவே 'திதி' ஆகி வல்லமையை உணர்த்துகிறது.

வரதமும் மோதகம் ஏந்தியதுமாகிய இன்னொரு கரம், கீழ்நோக்கி இருப்பது சிறந்த ஞானக் குறியாகும். வினைத் துயருக்கு அஞ்சித்தஞ்சம் புகுந்த உயிரின் குறிக்கோள் திருவடியாகிய முக்திப்பேறு என்பதை இது குறிக்கிறது. பிறவித் துயருக்கு அஞ்சி வந்த உயிர் அதன் பக்குவத்திற்கு ஏற்ப அடைகின்ற திருவருளை வரதகரம் உணர்த்துகிறது. மோதகத்தை ஏந்திய கரம், வரத கரத்தையும் அடுத்து, சுட்டாமல் சுட்டிக் காட்டுவதன் குறிப்பு, திரோதானமாகிய மறைப்புத் தொழிலை உணர்த்துவதாகப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

ஐந்து கரங்களில் மிகவும் முக்கியமானது தும்பிக்கை என்பது வெளிப்படையாகும். யானையின் உருவத்திலேயே உயர்தனிச்சிறப்பு அதன் தும்பிக்கையே ஆகும். வேறு எந்த விலங்குக்கும் அல்லது மனிதப் பிறவிக்கும் இல்லாத ஓர் இயல்பு தும்பிக்கைக்கு உள்ளது. அது என்னவென்றால் கையே மூக்காக அமைந்த பண்பாகும். அதனோடு கூட இந்தத் துதிக்கையானது நிலம் வரை தொடுகின்ற அளவு நீளமுடையதாகவும், வெளி மண்டலத்தில் சென்று நீட்டும் அளவுக்கு உயரக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. அதனோடு எப்பொழுதும் காற்று இழைந்துகொண்டு இருப்பதாகவும் இது அமைந்திருக்கிறது. இக்காரணம் பற்றியே யோகிகள் தங்களுடைய காற்றுப் பயிற்சியை உள்ளடக்கி, வானமும் பூமியும் தொடுகின்ற சரஞானத்திற்குத் தும்பிக்கையை உருவகமாக எடுத்துப் பேசுகிறார்கள். ஆகையினால் விநாயகருடைய திருவுருவத்தில் யோகிகளுக்குத் தும்பிக்கை மிகமிக முக்கியமான ஞான உறுப்பாக அமைந்துவிளங்குகிறது. பல சரநூல்கள் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றன.

விநாயகருடைய கொம்புகளிலே ஒடிந்த கொம்பு அபர ஞானமாகிய விந்துவையும், மற்ற ஒற்றைக் கொம்பு நிலையான பரம்பொருளை உணர்வதற்கு உரிய சாதனமாகிய பரஞானத்தையும் உருவகப்படுத்துகின்றன. சில பெரியோர்கள் இந்த இரண்டு கொம்புகளையும் பதிஞானம், பாசஞானம் என்றும் கூறுகின்றார்கள். பாசஞானம் வலது கொம்பாகிய ஒடிந்த கொம்பு.

விநாயகருடைய அகன்ற செவிகள் இரண்டும் பிறவியின் வினை வெம்மையை அணுகவிடாமல் காக்கின்ற அருட்காற்றை வீசுகிற விசிறிகளாம். இந்த அகன்ற செவிகள் எல்லாவற்றையும் அறியும் பேரறிவை உணர்த்தி, வினை வெம்மையைத் தணிக்கின்ற ஞானப் பெருஞ்சாதனங்கள் என்று சித்தர் இலக்கியம் பேசுகின்றது.

விநாயகருடைய மூன்று கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றுமாம்.

யானையின் உருவம் பெரிதாக இருப்பினும் அதன் கண்கள் மிகச் சிறியனவாக அமைந்திருப்பதன் நுட்பம் சிந்தித்தற்கு உரியது. பெரிய உறுப்புகள் பருப் பொருளையும், சிறிய உறுப்புக்கள் நுண் பொருளையும் குறிப்பது சித்தர் ஞானத்தின் அடிப்படையான உருவக உத்தியாகும். இந்த முறையிலே சிறிய கண்கள் நுட்பமான ஞான ஆற்றலை உணர்த்துகின்றன என்பதைத் தேர்ந்துகொள்ளவேண்டும்.

விநாயகருடைய உருவத்திலே, உந்தியிலும், மார்பிலும், கழுத்திலும், நெற்றியிலும், உச்சியிலும் பாம்பு படம் விரித்து நிற்பது, குண்டலினி அந்தந்த நிலைகளிலே இயங்குகின்ற உண்மையை நுட்பமாக உணர்த்துகிறது.

இனி, விநாயகர் எலிவகையில் ஒன்றான மூஞ்சூறு என்னும் நொய்ம்மையான பிறவியின் மேல் அமர்ந்திருப்பதன் நுட்பம் மிகவும் சிறப்பானதாகும். இவ்வளவு பெரிய உருவம் இவ்வளவு சிறிய உருவத்தின் மேல் எப்படி அமர்வது, எப்படி நகர்வது என்பவற்றைச் சிந்திக்கவேண்டும். சித்தர்கள் விநாயகரை ஞான ஆற்றலின் உருவமாக வழிபடுவதன் மரபுக்கு இதுவே ஆதாரமாகும். ஞான ஆற்றல் என்பது பருப்பொருளைப் போன்று எடையுள்ள பொருள் அன்று. எண்ணங்களும் கருத்துக்களும், சிறிய கம்பியிலே இவர்ந்து செல்கிற மின்சார ஆற்றலைப் போன்றவை யாகும். இன்னும் நுட்பமாகச் சொல்வதென்றால் மின்சாரத்தைப்போன்று சிறிய கம்பி கூட அதற்குத தேவையில்லை. ஒலி,ஒளி ஆகிய இரண்டு ஆற்றல்களுக்குமே கம்பி இருந்தும் இல்லாமலுங்கூட இயங்குகின்ற தன்மை இருப்பதைக் காண்கிறோம்.

வானொலி என்ற ஒலிப்பெட்டி, பிடித்து வாங்கிக் கொள்கிற ஒலி அலைகள் கம்பியிலிருந்து புறப்பட்டு, பின்னர் கம்பியில்லாத வான்துகளிலே பரவுகின்றன. தொலைக்காட்சி என்னும் ஒளி ஆற்றலும் இவ்வாறே நொய்ம்மையான முறையில் இவர்வதை இன்று காண்கிறோம். கனம் அல்லது எடை என்பதே இல்லாத மிகவும் நொய்ம்மையான ஒலி ஆற்றல், ஒளி ஆற்றல் ஆகிய இரண்டையும் விட மேலும்

நொய்ம்மையானது எண்ணத்தின் ஆற்றல். அதையும்விட நொய்ம்மையும் நுட்பமும் வாய்ந்தது ஆன்ம ஆற்றல். இந்த ஆற்றலின் வடிவமான விநாயகர் மூஞ்சூற்றையே தமது வாகனமாகக் கொண்டு காட்சி தருகிறார்.

சித்தர்கள் ஒலிமுறை, ஒளிமுறை என்று இரண்டு ஞான முறைகளிலே தமது ஞான வழிபாட்டை இயற்றுகிறவர்கள் என்பது முதலாவது பகுதியிலே விரிவாகவே விளக்கப்பெற்றது. இந்த இரண்டு வழிபாடுகளையும் விநாயகருடைய திருமுகம் நன்கு உணர்த்துகிறது.

ஒலி, ஒளி ஆகிய இரண்டுக்கும் கருவிகளாக அமைவன கண்ணும் நாசியுமாம். இந்த இரண்டையும் உணர்த்துகின்ற யானையின் முகமானது, நுட்பமான சிறிய கண்களையும் நீண்டு தொங்குகின்ற நாசியையும் தாங்கி நிற்கிறது. இதனால்தான் திருமூலர் விநாயகரை விரும்பி வணங்கும்பொழுது, அவரை ஞானக்கொழுந்து என்று அழைத்துப் பாடுகிறார். அந்த ஞானக்கொழுந்தை ஞானத்திற்கு இருப்பிடமாகிய அறிவிலே வைத்து வணங்குவதாகத் திருமூலர் தமது நூலைத் தொடங்குவதும் இது பற்றியே!

இத்தனை நுட்பங்களையும் தன்னுள் அடக்கி, அந்த நுட்பங்களின் தத்துவங்கள் அனைத்தையும் தாங்கிய விநாயகராகிய ஞான வடிவுக்கு அகவலாகிய செய்யுள் வடிவைத் தருகிறார் அவ்வையார்.

ஆம்; விநாயகர் என்ற மூர்த்தியின் வடிவம் சித்தர்களின் ஒளி முறையில் அமைந்த வழிபாட்டுக்குரிய காட்சிப் பொருளாகும். இந்தக் காட்சிப் பொருளுக்கு ஒலியினாலாகிய வடிவம் தந்து அமைத்திருப்பதே விநாயகர் அகவல் என்ற நூலாகும். ஒளி ஒலியைத் தருவதும், ஒலி ஒளியைத் தருவதும் சித்தர்களுடைய ஒளி வழிபாடு, ஒலி வழிபாடு இரண்டுக்கும் உள்ள நுட்பமான ஒருமைப்பாடாகும். எனவே, அவ்வையார் அருளிய விநாயகர் அகவல் ஒலி வடிவிலே ஒளியைத் தருவதும், ஒளிவடிவை மனக்கண் முன் நிறுத்தி ஒலியைத் தருவதுமாகிய ஞான சாதனமாகும்.

அவ்வையின் அகவல் தோன்றியது விநாயகராகிய ஒளிவடிவை நோக்கி. அந்த அகவல் வெளிவந்துள்ள அமைப்பு, மொழி ஆகிய ஒலி வடிவு. இந்த ஒலிவடிவானது ஒளிவடிவை நோக்கித் தோன்றி, அதனை ஓதுவாருக்கு ஒலியின் அதிர்வினால் ஒளிவடிவின் அனுபவத்தையும் ஒலி ஆற்றலின் அனுபவத்தையும் ஒருங்கே தருகிறது. தொலைக்காட்சியிலே ஒளியும் ஒலியும் இணைந்து இயங்குவது போல், அவ்வையாரின் விநாயகர் அகவலும் ஒளிக்கும் ஒலிக்கும் நிலையமாக அமைந்துள்ளது. அதனால்தான் விநாயகர் அகவல் எல்லா நிலையிலுள்ள மக்களுக்கும் ஒருங்கே பயன்தரக்கூடிய வழிபாட்டு நூலாக விளங்கி வருகிறது. அதை ஒரு பக்தி நூல் என்றும் அழைக்கலாம், ஒரு ஞான நூல் என்றும் அழைக்கலாம்; பயன்தருகின்ற முறையிலே அதை நோக்கினால் அதை ஓர்அரிய சித்தர் இலக்கியம் என்றே அழைக்க வேண்டும். தொண்டுநெறி, நன்மகவு நெறி, தோழமை நெறி, செந்நெறி ஆகிய நான்கு துறைகளிலும் வீசிப் படர்கின்ற பேராற்ற

லுடன் இந்த நூல் அமைந்துள்ளதே இந்த நுட்பத்திற்குச் சான்றாகவும் பயனாகவும் விளங்குகின்றது.

இத்தகைய நூலின் விளக்கத்தை இனி விரிவான உரையுடன் ஆராய்வோம்.

நூல் விளக்கம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட

திருவடியைச் செந்தாமரை என்று அழைப்பது ஓர் உயர்ந்த தமிழ் மரபாகும்.

மலர் என்னும் தமிழ்ச் சொல்லுக்கே தாமரை என்பது சிறப்புப் பொருளாகும். 'மலராவது தாமரையே' என்பது பெரியோர் வாக்கு. எனவே இறைவனுடைய திருவடியைத் திருவடித் தாமரை என்றும், தாமரைத் திருவடி என்றும் தமிழர் வணங்கினார்கள். வடமொழியிலும் 'பாத பங்கஜம்', 'பாத கமலம்' என்பது மரபாகும்.

தாமரை சேற்றிலே மலர்வது. சேற்றில் மலர்ந்தாலும் செம்மலராகப் பூப்பது. இம்மலரின் செம்மைசால் சிறப்பாகும். இதுவே வெண்டாமரையாகும்போது தூய்மையின் சின்னமான வெண்மையாக மலர்கிறது.

அழுக்கிலிருந்து அழகும், அள்ளலிருந்து தூய்மையும் பிறக்கின்றன என்பது தத்துவம். கருத்து என்னவென்றால் எல்லா அழகும் அழகின்மையிலிருந்து உதித்து, மேலெழுந்து நிற்கிற ஒரு தத்துவம் ஆகும்.

உயிர் உதிப்பதுமே இவ்வாறுதான். ஒரு குழந்தை அழகான வடிவம் கொண்டு எங்கிருந்து உருவாகி வெளிவருகிறது என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தோமானால் இந்தத் தத்துவம் நமக்குப் புரியும். அதனோடுகூடச் சேற்றுத் தண்ணீரில் முளைத்தெழுகின்ற தாமரையானது, சேற்றுத் தண்ணீரின் மயமாகிவிடுவில்லை. சகதி தண்ணீரிலே கரையும். அதைத் தண்ணீரிலிருந்து மீண்டும் கழுவ முடியாது. ஆனால் ஒரு தாமரையின் இதழிலே சேறானது இரண்டறக்கலக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் தாமரை இதழானது தண்ணீரிலே கரைகின்ற உப்பைப் போன்றது இல்லை. அது தண்ணீரிலே முளைத்தெழுந்தாலும் தண்ணீரோடு ஒட்டியும், ஒடடாமலே நிற்கிறது. பரம் பொருளின் தன்மையும் இதுவேயாம்.

பாரிலே முளைத்து நிற்கிற பரம்பொருளானது பாரினோடு ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கிற இந்தத் தன்மையை, தாமரை மலரோடு ஒப்பிட்டே சிவவாக்கியர் போன்ற சித்தர்கள் பாடியுள்ளார்கள். இவ்வாறுதான் தாமரை இலையும் கூட நிற்கிறது. தண்ணீர்த்துளி அதன்மீது உருளுமே தவிர உட்கலக்காது. ஒட்டாமலே உருண்டு பிறழ்கிறது. இதுவே அதனுடைய தூய்மையின் இலக்கணம்.

அழுக்கில் பிறந்து, அழுக்கில் வளர்ந்தாலும், அழுக்கு அதைத் தொடுவதில்லை. பாரிலே கலந்து நிற்கும் பரம்பொருளும் இவ்வாறு தாமரை இலைத் தண்ணீராகவே நிற்கிறது.

இனி, இந்த மலரின் அழகு எத்தன்மையது? சேற்றிலே மலர்ந்த இத்தாமரையைச் சுற்றிப் பாசி படர்ந்திருக்கிறது. பாசிக்கு நடுவிலே நின்ற போதிலும் இம்மலர் ஒப்பற்ற எழிலோடு பூத்து நிற்கிறது. இதனை வடமொழிக் கவிஞன் காளிதாசன், 'சரசிஜம் சைவலேனாபி ரம்யம்' என்று பாடுகிறான். பாசி சூழ்ந்திருப்பினும் தாமரை அழகோடு மிளிர்கிறது. இவ்வாறே வினைச் சுழல்களுக்கு நடுவிலே இறைவனுடைய கருணை மலர்ந்து நிற்கிறது. அழகு என்பது அதனுடைய மாண்பு. தூய்மை என்பது அதனுடைய சிறப்பு. இந்த மாண்பையும் சிற்ப்பையும் நாடுவது அடியார்களின் புகல் நாட்டமாகும்.

இத்தனை காரணங்களாலும் கருணைமிக்க தெய்த்திருவடியைச் செந்தாமரை என்று அழைக்கும் மரபு தோன்றி வளர்ந்தது. இதனையே 'செந்தாமரைப் பூம்பாதம்' என்கிறார் அவ்வையார்.

சீதம் என்பது குளிர்ச்சி அல்லது தன்மை. இதுவே வடமொழியில் தயை என அழைக்கப் பெறுகிறது. இறைவன் உயிர்கள்மாட்டுச் செலுத்தும் பெருங்கருணையை வியந்து பாடுகின்ற சித்தர்கள், இறைவன் திருவடியைக் குளிர்தாமரை என்றும் என்றும், சீதத் திருவடி என்றும் சொல்வது இதுகாரணம் பற்றியே ஆகும்.

வினை வெம்மைக்குத் தண்மை ஊட்டுகிற இந்தத் திருவடியை, திருவடி நீழல் என்று அழைப்பதும் இதனாலேயேதான். வெயிலுக்கு நிழலைப் போன்று பிறவி வினைக்கு திருவடி தண்மை தருகிறது. அவ்வையரும்தமது தனிப்பாடல் ஒன்றிலே,

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்

என்று பாடுகிறார். திருநாவுக்கரசரும் வீணைக்கும் நிலவுக்கும் தென்றலுக்கும், இளவேனிலுக்கும், பொய்கைக்கும் உவமை கூறி, 'ஈசன் எந்தை இணையடி நீழ' லைப் பாடுகிறார்.

இறைவனுடைய திருவடி பிறவிதோறும் நம்மைத் தொடர்ந்து வருகின்ற தெய்வ ஆற்றலாகும். பிறவிதோறும் நம்மைத் தொடர்கின்ற இந்த நுட்பத்தை வாசனை என்று அழைப்பது சித்தர் மரபு.

பூவினில் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது

என்பது திருமந்திரம்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் உள் அடக்கியே வாசனை பொருந்திய செந்தாமரைப் பாதம் என்று விநாயகரின் திருவடியை

அழைக்கிறார் அவ்வையார். களபம் என்ற சொல் சந்தனத்துக்கு ஆகி, அது தருகிற நறுமணத்திற்கு ஆகிறது.

'சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதம்' என்று சொல்லும் போது, ஆன்மாக்களின் மலங்களுக்குள்ளே, அம் மலங்களை ஒட்டுவதற்குரிய கருணையோடும், தூய்மையோடும், ஆன்மாவைக் கவர்ந்திழுக்கும் எழிலோடும் விளங்குவதும், தண்மையும் வாசனையும் பொருந்தியதும் ஆகிய திருவடிப் பண்புகளைப் பாதத்தாமரைக்கு ஏற்றித் தமது அகவலைத் தொடங்குகிறார் அவ்வையார்.

இறைவன் மேடு பள்ளங்களில் விழுந்து தத்தளிக்கும் உயிர்களைக் காக்கும் பொருட்டு, தனது கருணையின் அழைப்பே இடையீடின்றி ஒலித்துக்கொண்டே இருக்கிறான். அந்த அழைப்பிலிருந்து நாம் காதுகளைப் பொத்திக் கொள்கிறோம். இதுவே வெவ்வினையின் தீச்செயல் என்றாலும் கருணாமூர்த்தியின் ஒலி நில்லாது ஒலித்துக் கொண்டே உள்ளது.

'என் பாதத்தில் உன்னை ஒப்படைத்துவிடு' என்று கீதையிலே பகவான் எத்தனையோ முறைகளில் மீண்டும் மீண்டும் உறுதி சொல்கிறான் அல்லவா! இதைத்தான் இறைவனுடைய கருணை ஒலி என்கிறோம். இந்தக் கருணையானது வெள்ளம் போன்று ஓடுகிறது. அதைத் துய்ப்பதற்குச் 'சேரவாரும் செகத்தீரே' என்று தாயுமானவர் அழைக்கிறார்.

ஓயாமல் ஒழியாமல் திருவடிக்கு அழைத்துக்கொண்டே இருக்கிற இந்தக் கருணையின் ஒலியையே பாதச் சிலம்பின் ஒலி என்று ஞானிகள் உருவகித்தார்கள். கருணைத் திருவடியை வந்தடையுங்கள் என்று அந்தத் திருவடியின் சிலம்பே பற்பல முறைகளிலே நம்மை அழைக்கிறது. இதனைத்தான் பாதச்சிலம்பின் பற்பல இசை ஒலிகள் என்று ஞான மரபு நமக்கு உணர்த்துகிறது. அவ்வையாரும் இதனையே 'பாதச் சிலம்பு பல இசைப் பாட' என்கிறார்.

பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப

இந்த இரண்டு வரிகள் ஞானயோகப் பயிற்சியில் உள்ள மிகவும் முக்கியமான குண்டலினிப் பயிற்சியை நுட்பமாக விளக்கக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன.

விநாயக மூர்த்திக்கு அணி பணிகள் பல புனைந்து மகிழ்கின்ற தொண்டர் உலகம், இடுப்பிலே அரைஞாணைச் சுற்றி அமைத்தது ஒரு பெரிய யோக நுட்பமாகும்.

மனிதர்கள் தங்களுடைய குறிக்கோளை இறை வடிவத்திலே ஏற்றி வணங்குவது, வழிபாட்டு முறையின் வரலாற்றிலே பரந்து காணப்படுகிற ஓர் உண்மையாகும். இந்த வரலாற்றின் கண்கொண்டு அரை ஞாணை நாம் நோக்கவேண்டும்.

விநாயகரை மூலாதார கணபதி என்று யோக நூல்கள் அனைத்தும் வழிபடுகின்றன. மூலாதாரம் என்பதே குண்டலினி ஆகிய மூலக்கனலின் தோற்றுவாயாகும்.

நிலத்தின் அடியிலிருந்து தண்ணீர் சுரந்து மேலே வருவதுபோலே மனித உடம்புக்குள்ளிருந்து குண்டலினி என்ற ஆற்றல், மூலாதார நிலையத்திலிருந்து மேலே கிளம்புகிறது. ஞானயோக நூல்கள் அனைத்தும் இந்தக் குண்டலினியின் தோற்றத் தேற்றத்தைப் பல்லாற்றானும் நமக்கு உணர்த்துகின்றன. மூலாதாரத்திலிருந்து எழுகிற கனல், ஆன்ம ஆற்றல்கள் அனைத்திற்கும் வித்தாக அமைந்துள்ளது. குண்டலினி யோகம் என்பதே இந்த மூலாதாரக் கனலை மேல்நோக்கி எழுப்பித் தலையையும், அதன் மேல் உள்ள மண்டலத்தையும் எட்டும்படி செய்து, பிறகு இதை ஏற்றி இறக்கும் உத்திமுறைதான். இந்த ஏற்றி இறக்கும் உத்திக்குக் கருவிக் களனாக உதவுவது மனித உடம்பில் இடுப்பேயாகும்.

குண்டலினி என்னும் ஞானக்கனல் எழுந்து இயங்குவதை நெறிப்படுத்துகிற ஆற்றல் இடுப்பிலும், அதைச் சுற்றிலும் உள்ள தசை இயக்கத்திலும் அடங்கியுள்ளது. அரைஞாண் என்பது இடுப்பைச் சுற்றி இயங்குகின்ற மின்னாற்றலாகிய கொடி வளையமாகும். குண்டலினி ஆற்றல் மேலே எழுவதற்கு, அதை இயக்கும் சக்தியாக இடுப்பின் ஆற்றல் வளையம் அமைகிறது என்பதையே இது குறிக்கிறது.

சிவபெருமானுடைய வடிவக் கோலங்களில், அவனுடைய இடுப்பைச் சுற்றி ஒரு பெரிய பாம்பு படம் எடுத்து வளைந்து நிற்பதைக் காண்கிறோம். இடுப்பே குண்டலினிப் பாம்பு சுற்றியுள்ள இடம் என்பதை இவ்வாறு உருவகித்துக் காட்டினார்கள் நம் முன்னோர்கள்.

விநாயகருடைய வடிவிலே இடுப்பில் அரைஞாணை இறுக்கிக் கொண்டு இருப்பதாகக் காட்டுவதன் நோக்கம், குண்டலினி ஆற்றலினுடைய நிலையை மாற்றுவதற்கு இடுப்பிலே ஓர் ஆற்றல் வளைந்து சென்று இயக்க வேண்டும் என்பதை உணர்த்தவே.

குண்டலினி ஆற்றலின் நிலை மாற்றம் அடைந்தால்தான், 'பிராண மயகோசம்' என்று அழைக்கப்படுகிற 'புரியட்டகம்' என்னும் நுண்ணுடலின் நிலை மாண்புபெறுகிறது. எனவே இந்த நிலை மாற்றத்தை அழுத்தமாக உணர்த்தவே ஞான வடிவமாகிற விநாயகரின் இடுப்பிலே அரைஞாணை இறுக்கிக் காட்டினார்கள்.

இப்படி இறுக்கி இயக்குகிற ஆற்றலுக்கு 'ஆகுஞ்சனம்' என்று சித்தர்கள் இலக்கியம் பெயர் சூட்டியிருக்கிறது. மூலாதார மையத்தில் தசை இறுக்கும் என்னும் உத்தியைக் கையாண்டு, இடுப்பைச் சுற்றித் தசை ஈர்ப்பை ஒரு குறிப்பிட்ட முறையிலே வளைத்து இயக்கினால், குண்டலினி என்ற மூலக்கனல் மேலே கிளம்பத் தொடங்கும். இந்த உத்திமுறையை மாணவன் ஞானகுருவின் முன்னிலையில் நேர்முகமாகப் பயிலவேண்டும். வெறும் ஏட்டுப் படிப்பை வைத்துக்கொண்டு இதைச் செய்ய முயலுவது ஆபத்துகளுக்கு இடந்தரும்.

குருவினால் உணர்த்திக் காட்டக்கூடிய இந்த 'ஆகுஞ்சனம்' என்ற பயிற்சியே, அரைஞாண் என்ற குழூஉக்குறியால் உணர்த்தப்பெறுகிறது. 'இடுப்பை இயக்கு, குண்டலினி எழும்' என்பது மூலக்கனற் பயிற்சியின் தொடக்கப் பாடமாகும். சுற்றி வளைத்துள்ள பாம்பு படம் எடுக்க வேண்டுமானால், இந்த வளையாற்றலின் இயக்கம் அதற்குரிய உத்தி முறையிலே நடைபெற வேண்டும். இவ்வாறு நடைபெற்று 'ஆகுஞ்சனம்' என்ற பயிற்சி முறையினால் 'புரியகட்டகத்தின்' ஆற்றல்மாறி இயங்கத் தொடங்கினால், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆன்ம நுண் நிலையங்களும் ஒரு குறிப்பிட்ட முறையிலே செயலாற்றத் தொடங்குகின்றன.

இவ்வாறு அரைஞாண் என்னும் உத்திமுறையானது இடுப்பை வைத்துக்கொண்டு இயங்குமேயானால், நமது உடம்பைச் சுற்றிப் பருவுடலைப் போர்த்து நிற்கும் மேலாடையாகிய ஒளி உடம்பு, ஒளி மிகுந்து கதிர்வீசத் தொடங்குகிறது.

ஞானப் பயிற்சியில் முன்னேற முன்னேற மாணவர்களின் முகத்திலே ஒளித்திகழத் தொடங்குவதை நாம் காண முடியும். சாதாரணமாக அறிவு நிரம்பிய பெரியோர்களுடைய முகத்திலே 'தேஜஸ்' என்றும் 'காந்தி' என்றும், 'அறிவுக்கனல்' என்றும் 'களை' என்றும், பல பெயர்களிலே நாம் அழைக்கின்ற ஓர் ஒளியானது கதிர்வீசுவதைக் காண்கிறோம் அல்லவா! நூலறிவும் கலையறிவுமே இத்தகைய ஒளியை முகத்திலே வீசக் கூடுமானால், பேரறிவின் ஆன்ம ஆற்றல் எழுந்து ஓங்குகின்ற ஒரு ஞானியின் நுண் உடலிலே ஒளியானது ஒப்பற்ற சுடர்ப்புடன் பொலிவது விந்தையாகுமா?

தங்க அரைஞாண் இந்த ஞான ஆற்றலின் இயக்கச் சுழலையும், பொன் என்பது அதனுடைய மின்னாற்றலையும், பூந்துகில் ஆடை என்பது பருவுடலைச் சுற்றி நிற்கும் நுண் உடலையும், அழகு எரித்தல் என்பது ஒளியின் கதிர்கள் எழுந்து வீசுவத்தையும் குறிக்கின்றன.

'வண்ண மருங்கில் வளர்ந்து' என்ற தொடர் இந்த உடம்பின் மருங்கில் ஒளியுடல் முழுப்பொலிவோடு திகழ்கிறது என்பதைக் குறிக்கிறது.

விநாயகருடைய வடிவம் என்பதே வடமொழியில் 'ஆத்ம ஸ்வரூபம்' என்று கூறப்பெறுகிற பேரறிவுடலாகும். இந்த அறிவு மயமான உடலிலே மூலாதாரக் கனலை இயக்குகின்ற மண்டல வட்டமே தங்கத்தால் ஆகிய அரைஞாண் ஆகும். இந்த உடலை இதன் மருங்கில் இருக்கும் ஒளி உடல் ஆளுகிறது. அந்த ஒளி உடல் பூந்துகில் ஆடைபோன்று பரவுகடலின் மீது மருங்கு சுற்றி அமைந்திருக்கிறது. மூலக்கனல் அதனுடைய இயக்கத்திலே மாற்றம் அடைந்து தொழிற்படும்போது, ஒளி உடலிலே பொலிவு முழுமை பெற்று அதன் ஆற்றலிலே ஏறிப் பாய்கிறது. அப்போது அந்த அறிவுமயமான நுண் உடலில் ஒளித்துகள்கள் வெளியே தெறிக்கிறன்றன. அந்தத்தெறிக்கும் நிலையை அழகு எரிக்கும் நிலை என்று செய்யுள் பாடுகின்றது.

இன்றைய விஞ்ஞானிகள், இன்றைய நுண்கருவிகளைக் கொண்டு, இக்காலத்து அறிவியல் முறையிலே ஒளி உடலின் ஆற்றலை ஆராய்ந்து

வருகிறார்கள். அண்மையில் நமது தமிழகத்தை சேர்ந்த ஒரு மருத்துவ நிபுணர், மனித உடம்பின் மருங்கிலே மன்னி நிற்கிற ஒளி உடலைப் படம்பிடித்து ஆராய்வதற்குரிய ஒரு பெரிய விஞ்ஞான உத்தியை நவீன முறையிலே வளர்த்துள்ளார். இந்த முறையின் படி மனிதனுடைய பரு உடலுக்குக்கேடு வருவதற்கு முன்பே, ஒளிஉடலில் அதன் அறிகுறியைக் கண்டுபிடித்துவிடலாம் என்ற தமது ஆராய்ச்சியை வெளியிட்டிருக்கிறார். அதாவது பரு உடலை ஆராய்ந்தோமானால் அதை ஏற்கனவே பீடித்துள்ள நோயைத்தான் கண்டுபிடிக்க முடியும். உடம்புக்குள்ளே புகுந்துள்ள திருடனைக் கண்டுபிடிப்பது போல, எக்ஸ்ரே போன்ற நுண்ணொளிக் கருவிகள் மூலம் கண்டு பிடிக்கிறோம். ஆனால்இந்தஉடம்புக்குள்ளே வருவதற்கு முனைந்து நிற்கிற, இன்னும் புகவில்லை, ஆனால் புகுவதற்கு முனைந்து நிற்கிற, நோயாகிய திருடனை ஒளிஉடல் நமக்கு முன்கூட்டியே காட்டிவிடுகிறது.

மிகப்பெரிய நோய்கள் ஒரு மனித உடம்பை அணுக முனைகின்றன என்பதை, அவை அணுகுவதற்கு முன்பே கண்டுபிடிக்க வேண்டுமானால், ஒளிஉடலைத்தான் படம் எடுக்க வேண்டும்; பருஉடலின் எக்ஸ்ரே படம் முன்னெச்சரிக்கையை அறிவிப்பது இல்லை. இதுவே அண்மைக் காலத்து மாபெரும் கண்டுபிடிப்பாகும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒளி உடலானது பொலிவைக் கதிர் வீச்சுகளாகத் தெறிக்க அல்லது எரிக்கத் தொடங்கி விட்டால், அந்த ஒளி உடம்பிற்குரிய பரு உடம்பானது பேரறிவின் மயமான தூய புரியட்டகமாக மாறிவிட்டது என்பதே!

சாதாரண மனித உடம்புக்கே இந்த விதி பொருந்துமானால், இன்னும் எத்தனை மடங்கு பெரிதாக இந்த உண்மை இறைவடிவுக்குப் பொருந்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதைத்தான் 'பொன் அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்' வளர்ந்து அழகை எரிப்பதாக அவ்வையார் பாடுகின்றார்.

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

பேழை வயிறு என்பது உலகனைத்தையும் தன்னுள் அடக்கிய பரம்பொருள் நிலையைக் காட்டுகிறது.

அண்டங்கள் அனைத்தும் ஆண்டவனுக்குள்ளும், ஆண்டவன் அண்டங்களுக்குள்ளும் அமைந்து நிற்பதுதான் பரம்பொருளின் தத்துவ நிலையாகும். பேரறிஞர் ராஜாஜி 'கடவுள்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஈடாக இறைவனைப் பற்றிய சொல் வேறு எந்த மொழியிலும் இத்தனை அழகோடு கிடையாது என்று அழுத்தமாக அடிக்கடி கூறவதுண்டு. அண்டங்களைக் கடந்து நிற்கும் நிலையையும், அண்டங்களுக்குள் அடங்கி நிற்கும் நிலையையும் ஒரு சேர உணர்த்தக்கூடிய ஒப்பற்ற ஒரு சொல் 'கடவுள்' என்ற சொல் ஒன்றுதான்; இத்தனை அழகிய சொல்லை, இத்தனை விரிந்து பரந்து பொருள் தருகிற சொல்லைத் தமிழைத் தவிர வேறு எந்த மொழியிலும் தான் அறிந்த வரை கண்டதே இல்லை என்று அவர் வியந்து வியந்து சொல்வது

இந்த இடத்தில் எனக்கு நினைவு வருகிறது. 'கடவுள்' என்ற இந்த அழகிய சொல்லுக்குரிய உருவகமே பேழை வயிறு!.

'பெரும்பாரக் கோடு' என்பது ஞான உடம்பிலே யோகப் பயிற்சியில் செய்யப்படுகிற ஓர் இரகசிய உத்தியை உணர்த்துகிறது என்ற சிவயோகி இரத்தினசபாபதியார் தமது உரையிலே வற்புறுத்திக் கூறுகிறார். அவருடைய விளக்க உரை வருமாறு:

"பல்லிலேதான் ருத்திரக் கிரந்தி பேதனம் செய்யும் ஆற்றல் உள்ளது. பழையன கழிந்தால்தான் புதுவீடு கட்ட முடியும். பழைய ஆசைகளின் இருப்பாகிய பெட்டகத்தின் சாவி இங்குள்ளது. அறிந்து திறந்தவர் தேகமற்ற ஜீவ ஒளிக்குப் போக முடியும். அதனால் கடை வாய்ப்பல், யானையாகிய பிரணவத்தின் வியட்டிப் பிரணவமான அ,உ, மவையும் விந்து நாதங்களையும் எல்லை பிரிக்கும் இடமாயிற்று. பாரம் - எல்லை".

வேழ முகமும் விளங்க சிந்தூ ரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்

மனித உடம்பு பருப்பொருள் நிலையிலே தன்னியல்பில் இயங்கும் போது அது இருள்வடிவமாக இருக்கிறது. சித்தர்களின் யோக ஞான முறைப்படி ஆன்மப் பயிற்சியிலே இந்த உடம்பு தோயும்போது அது ஒளிமயமாகிறது. முன்பிருந்த இருளை ஞானமாகிய கை வெருட்டி விடுகிறது. தும்பிக்கை என்பது இதுவே. ஞானக்கண் கொண்டு பார்க்கும் மாணவனுக்கு முகத்தின் முன்பு ஒளிமண்டபம் வாய்க்கிறது. இந்த ஒளி மண்டலமானது யானை தனது தும்பிக்கையை நீட்டுவது போன்ற பாங்கிலே காண்கிறது என்பது சித்தர்களின் அனுபவ வாக்காகும்.

இந்த ஞான விளக்கத்தோடு சிந்தித்தோமானால், வேழ முகம் என்பதன் உட்பொருள் ஞானக்கல்வி என்ற சித்தர் பயிற்சியின் உருவகம் என்பது நமக்குப் புலனாகும்.

ஞானக் கல்வியின் பாதையிலே ஒரு மாணவன் முன்னேறும்போது, அக்கினி கலை என்ற தத்துவமானது மேல் எழுந்து செவ்வொளியுடன் சுடரத் தொடங்குகிறது. அந்த ஒளியானது நெற்றிக்கு நேரே புருவ நடுவின் எதிரிலே தோன்றுவதால் அதைத் திலகம் என்றும், செந்தூரத் திலகம் என்றும் அழைப்பது சித்தர்கள் மரபாகும். இத்தகைய செஞ்சுடர் குருவின் அருளினால் ஒரு மாணவனுக்குத் தோன்றும்பொழுது அவனுடைய ஆணவம் அழிந்து அவன் சிவத்தன்மை பெறுகிறான். சீவன் சிவனாவது இந்த ஞான அனுபவமே.

இதைத்தான் மணிவாசகப் பெருமான் தமது திருத்தெள்ளேணத்தில் அழகாகப் பாடுகிறார்:

நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ

'அங்குச பாசம்' என்பது அடக்கத்தின் உருவகம். இதுவே அங்குசமாகும். அதாவது உடம்பின் ஆற்றலைக் கட்டுப்படுத்தும்

ஞானக் கருவி. இனி, பாசம் என்பது அடங்கி நிற்கும் மனித உடம்பின் வினையாற்றலை மீண்டும் மேலெழாதவாறு பிணைத்துக்கட்டும் ஆற்றலாகும். பாசங்களை அடக்குவதோடு, அடங்கிய பாசங்கள் மீண்டும் பொங்கி எழாதவாறு இறுக்கிப் பிணைத்து, அவற்றைக் கட்டிப் போடுகிற யோக முறையையே அங்குசமும் பாசமும் உணர்த்துகின்றன.

'அஞ்சுகரம்' என்பது ஐம்புலனையும் ஒடுக்குகின்ற ஞான ஆற்றலையே ஆகும்.

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

ஞானப் பாதையிலே செல்லும் ஒரு மாணவனுக்கு அகக்கண்ணின் முன்னே தோன்றி நிலைத்து நிற்கிற நீல ஒளியை இங்கு 'நெஞ்சிற் குடிகொண்ட நீல' ஒளியாகக் கூறுகிறார் அவ்வையார். குடிகொள்வது என்பது அதனுடைய நிலைத்த தன்மையை, இந்த நீல ஒளியின் மயமாக மாணவனுடைய பயிற்சி இயங்க இயங்க, ஞான தேகமாகிய நீலமேனி பரிணமிக்கிறது.

சித்தர்களுடைய ஞானக் கல்வியிலே இந்த மனித உடம்பிலுள்ள இரண்டு உறுப்புக்கள் சிறப்பாகப் பேசப் பெறுகின்றன. அவை மூளையின் முன்புறமுள்ள பிட்யூட்டர் சுரப்பியும் **(Pituitary Gland)**, பின்புறமுள்ள பீனியல் சுரப்பியும் **(Pineal Gland)** ஆகும்.

சித்தர்களுடைய மொழியிலே முன்புறத்தைத் தத்புருட முகம் என்றும், பின்புறத்தைச் சத்தியோஜாத முகம் என்றும் அழைப்பது மரபாகும்.

தத்புருடம் என்பது ஞான உலகின் செயலை உணர்த்தும் சக்தி. பின்புறமுள்ள சத்தியோஜாதம் என்பது பேரறிவும் திருவருளும் இணைந்து உருவான ஞான உயிர். முகத்தின்முன் தோன்றுகின்ற நீல ஒளி குண்டலினியின் நுட்பநிலை. இந்த நீல ஒளியே அருட்சத்தியின் வெளியீடாம்.

பின்மூளையில் பீனியல் சுரப்பியின் இயக்கமும் முன் மூளையில் பிட்யூட்டர் சுரப்பியின் ஆற்றலும் இணைந்த நிலையிலேயே நீல ஒளி உதிக்கிறது. இந்த ஒளியை உதிக்கச் செய்யும் பயிற்சிதான் சித்தர்களின் இலக்கியத்திலே உள்ள ஆழமான மிகப் பெரிய ஆன்மக் கல்வியாகும். இதையே சீலாங்க வேதம் என்றும், கூத்தனுடைய நடனத்தின் உட்பொருள் என்றும் ஞானிகள் அழைக்கிறார்கள். இந்த அரிய பெரிய பயிற்சியைக் கற்பிப்பதற்காகவே தான் மாற்றுடல் எடுத்து வந்ததாகத் திருமூலர் பாடுகிறார்:

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியின் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே

திருமூலருடைய இந்தத் திருமந்திரத்தோடு அவ்வையின் அகவலில் உள்ள ஒளியின் நுட்பத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், உமையே

நீல ஒளியாகிய சக்தி என்பது புலப்படும். ஞானிகள் என்போர் இந்த ஒளியைத் தொடர்ந்து சென்று பேரறிவுக் காட்சிகளைக் கண்டு துய்த்தவர் என்பதும் தெளிவாகும்.

சித்தர் ஞானத்தின் கொடுமுடியாகிய அறிவு இதுவேயாகும். நீல ஒளியின் காட்சி! இதைத்தான் பிறிதோர் இடத்திலே திருமூலர் பாடுகிறார்:

ஆங்கது சேரும் அறிவுடை யோர்க்குத்
தூங்கொளி நீலம் தொடர்தலும் ஆமே

உட்கிடை என்னவென்றால் நீல ஒளி என்பது பராசக்தி; அகண்ட ஒளி என்பது சிவம். இவ்விரண்டினுடைய இணைப்பினால் ஏற்படுகின்ற மகவே ஞான வடிவமாகிய விநாயகன். எனவே அவனுடைய மேனி நீல மேனியாம். இந்த நீல மேனியைக் காண்பவர்க்கு மரணமிலாப் பெருவாழ்வு கிட்டுகிறது என்பதைத் திருமந்திர நூலில் பல இடங்களில் நாம் காணுகிறோம்.

'நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனி' என்பதனால் இத்தொடர் மன உடலின் ஆன்ம சத்தியை உருவகிக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான்ற வாயும் நாலிரு புயமும்

மனித உடம்பிலே முகத்திலுள்ள வாயின் அமைப்பு ஓர் அற்புதமாகும். நம்முடைய கீழ்வாய் அசைக்கும் செயலுக்கு உரியது. மேல்வாய் அசைத்தல் அற்றது. அசைக்கின்ற கீழ்வாயை நான்ற வாய் என்று கவிச்சொல் அழைக்கின்றது.

யோகிகளுடைய பயிற்சியாகிய இந்தக் கீழ்வாயின் அசைவைக் கொண்டு சில உள் ஆற்றல்களை எழுப்புகிற பயிற்சி ஒன்று உண்டு. ஆசானின் வாயிலாக நேரில் அறிந்துகொள்ள வேண்டிய இந்தப் பயிற்சிக்கு உருவகமாக நிற்பது நான்ற வாய் என்ற தொடராகும்.

ஞானப் பயிற்சியிலே கீழ்வாயின் இரகசியத்தை உணர்கின்ற மாணவன், தனது ஞானப் பாதையிலே முன்னேற முன்னேற அவனுக்கு ஒளி மண்டலம் முழுமையான சுடர்ப்புடன் தோன்றத் தொடங்குகிறது. அந்த ஒளியானது முகத்தின் முன்புறம், பின்புறம், மருங்கின் இருபுறம் ஆகிய நான்கு பக்கங்களிலும் எழுந்து பரவி நிற்கிறது. இதை நான்கு புயங்கள் என்ற உருவகித்து உள்ளார்கள். நான்ற வாயின் பயிற்சியினால் இந்த நான்கு புயங்கள் காட்சி தருகின்றன என்பது உட்பொருளாகும்.

இந்தப் பயிற்சியின் முதிர்வு கனியக் கனிய நான்கு திசைகளோடு நான்கு கோணங்களும் ஒளிதோன்றத் தொடங்குகிறது. அந்நிலையிலே நான்கு இரட்டித்து எட்டுத் திசையிலும் எட்டு ஒளிப்புயங்கள் அகக்கண்ணின் புலன் அனுபவமாகச் சித்திக்கின்றன.

விநாயகர் என்ற வடிவம் ஞானமும் ஞானத்தின் பயனும் சேர்ந்து உருவகிக்கப்பெற்ற பேரான்ம வடிவமானதால், அந்த வடிவத்தின் உறுப்புக்களில் ஒவ்வொன்றும் ஞானத்தின் முதிர்வு நிலையை உருவ

கத்திலே சித்திரிக்கின்றது. ஆகையினால் விநாயகருக்கு 'நான்ற வாயும் நாலிரு புயங்களும்' உறுப்புக்களாக அமைகின்றன.

மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

விநாயகர் பிரணவத்தின் வடிவம்; பிரணவம் என்பது ஓம் என்னும் ஒலி; இந்த ஓம் என்னும் ஒலி அ உ ம் என்ற மூன்று எழுத்தொலிகளால் ஆன கூட்டொலி என்னும் அடிப்படையை நாம் அறிவோம். முக்கண் என்ற குறியீடும் இதையே குறிக்கின்றது.

வலக் கண்ணாகிய சூரியன் அறிவு மயமானது. இடக் கண்ணாகிய சந்திரன் உணர்வு மயமானது. பிடரிக் கண்ணாகிய ஞானமையம், அகப்பார்வை கைகூடும்போது கனலாக இயங்குகிறது. இந்தக் கனலே ஞான நெருப்பாகும். பிரணவம் என்பது இந்த மூன்றும் இணைந்த யோகக் காட்சியே. எப்படி என்றால் வலக்கண் அகரம்; இடக்கண் உகரம்; பிடரிக்கண் மகரமெய். சித்தர்களின் யோகப் பயிற்சியிலே முனைந்து நிற்கும் மாணவனுக்குச் சூரியனனும் சந்திரனும் ஞான நெறியிலே தொழிற்படத் தொடங்கும்போது, பிடரிக்கண்ணின் இயக்கம் கூடுகிறது. இந்த மூன்றும் இணைந்த புணர்ப்பே ஞான யோகமாகும். அப்படிப்பட்ட ஞானயோகம் கைகூடும்போது இந்த மூன்று இடங்களில் இருந்தும் மூன்று வகையான சுரப்புநீர் ஊறி வருகிறது. இந்த மூன்று விதமான சுரப்பு நீரும் யோக மாணவனின் அமுதம்.

மும்மதம் என்பது இந்த மூன்று விதமான சுரப்பு நீரையே .

'சுவடு' என்பது **'Vibrations'** என்னும் ஒலி அதிர்வின் பதிவுகளே. மூன்று கண்ணும் இணையும்போது ஒரு யோகிக்கு மூன்று நிலைகளிலிருந்தும் மூன்று நாதங்கள் எழுகின்றன என்பது, சித்தர் வாக்கு. இந்த நாதங்களை அகச்செவியினால் கேட்டு அதில் ஒடுங்கி நிற்பதே ஞானயோகம்.

'சுவடு' என்று இங்கே குறிப்பது இந்த ஒலி அதிர்வுகளின் பதிவுகளையே. இவை இக்காலத்து **'Tape - Recorder'** பதிவு போன்று மூளையிலே பதிகின்றன. இந்த அக உலகின் ஒலிக்கேள்வியே யோகிகளின் மாபெரும் வல்லமையாம். அடுத்துவரும் வரி இதனை உணர்த்துகிறது.

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்

அக உலகின் ஒலிகளைக் கேட்பது என்பது சாதாரண நிலையில் உள்ள மக்களுக்கு இயலுவது இல்லை. அதற்கென்று பல பயிற்சிகளைச் செய்து முன்னேற முன்னேற, அகச்செவி நன்கு திறந்து விடுகிறது. அப்படித் திறக்கும்பொழுது மும்மதம் பொழிவதோடு ஆதார நிலைகளின் ஒலிகளும் அகச் செவியிலே கேட்கத் தொடங்குகின்றன. மூன்று கண்ணும் சேர்ந்து இயங்கும்பொழுது ஏற்படுகிற இந்த அனுபவமானது ஆதார ஒலிகளைக் கேட்கும் வல்லமையைத் தருவதோடுகூட, அகச்செவிகொண்டு தொலைதூரத்து ஒலிகளையும் கேட்கும் ஆற்றலை வழங்குகிறது.

உலகெங்கணும் எழுகின்ற ஒலிகள், அவை எழுந்த மாத்திரத்திலேயே விண் அணுக்களில் கலந்துவிடுகின்றன. வானொலிப்பெட்டி

யிலே குறித்த அலைவரிசையைத் திருப்பும்பொழுது அந்தந்த ஒலிகளை நாம் கேட்ப போல, அகச் செவியானது உலகின் அலைவரிசைகளிலே இயங்கத் தொடங்கிவிடுகிறது. அத்ன் காரணமாகத் தொலை ஒலிகளை ஒரு யோகி இருந்த இடத்தில் இருந்தே கேட்கும் ஆற்றலைப் பெற்றுவிடுகிறான். அதனோடுகூட அவனுடைய அகக் கருவியானது ஒரு தொலைக்காட்சிப் பெட்டியைப் போன்ற வல்லமையையும் பெற்று விடுகிறது. அப்போது தொலைதூரத்துக் காட்சிகளையும் அவன் இருந்த இடத்திலிருந்தே பார்க்கின்ற ஆற்றலைப் பெற்றுவிடுகிறான். அது தொலை ஒலி ஆற்றலைப் போலவே தொலை ஒளி ஆற்றலையும் பெற்றதாகப் பரிணமிக்கின்றது. இதுவே, 'இலங்குபொன் முடியாக' அவனுடைய ஒளி உடம்பின் மகுடமாகிறது. இந்த ஒளி பொன்னிறமானது.

திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்

சித்தர்களின் இலக்கியத்திலே மூன்று நாடிகளை முப்பொரி என்ற அழைப்பது மரபு. இடகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் இந்த மூன்று நாடிகளிலும் இயங்குகின்ற ஆற்றல் முப்புரிநூல் என்று உருவகம் செய்யப்பெற்றுள்ளது.

இந்த மூன்று நாடிகளும் மனித உடம்பிலே அநாகதச் சக்கரம் என்ற நிலைக்களத்தில் மண்டலம் கொள்கின்றன. இந்த அநாகதச் சக்கரம் இருக்கும் இடம் மார்பாகும். அது விரிந்து பரந்த ஒளி மண்டலம். இதைத்தான் 'திகழொளி மார்பு' என்று அவ்வையார் குறிப்பிடுகின்றார்.

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே

ஞானத்தின் மூலாதாரம் சொல்லினால் விவரிக்க ஒண்ணாதது. அந்தச் சொற்பதம் கடந்த நிலையிலே ஒரு யோகி தனது உயிர் இயக்கத்தைச் செலுத்தும்போது, அவனுடைய அந்த அனுபவ நிலை துரியம் எனப்படும். அது சொல்லும் செயலும் அற்றுப்போன பாழ்வெளியாகும். அது உருவம், பெயர் முதலிய அளவைகளுக்கு அப்பாற்பட்ட அற்புத நிலையாகும். இந்த நிலையைப் பரவெளி என்றும், பரசிவ ஆதார நிலை என்றும் யோகிகள் அழைக்கிறார்கள். இந்த அற்புத நிலையிலிருந்து பிறப்பதுதான் ஞான ஒளியும் ஞான ஒலியும் கூடிய பிரணவமாகிய விநாயகப் பொருளாம். எனவே இந்த விநாயகப் பொருளைச் சிவன் ஈன்ற குமாரன் என்ற உருவத்திலே சித்தரித்து வழிபடுகிறோம்.

இந்த ஞானமானது எல்லா வல்லமைகளையும் தரக்கூடியதான ஆற்றல் நிரம்பி இருப்பதால் இதைக் கற்பகக் களிறு என்று சொல்வது ஞான மரபாகும். விநாயகனைச் சொற்பதம் கடந்த அற்புதனின் பிள்ளை என்றும், கற்பகக் களிறு என்றும் கூறுவதன் உருவகம் இதுவே. கற்பகம் கேட்டதை எல்லாம் தரக்கூடியது என்பது புராணங்களில் வருகிற உருவகச் செய்தி.

முப்பழம் நுகரும் மூசிக வாகன

யோக நெறியின் அடிப்படை மூன்று கண்களில் அடங்கி உள்ளது. மூன்று நாடிகள் என்பதும் இந்த இயக்க நிலையினையே. இந்த மூன்று நாடிகளும் ஞான நெறிப்படி இயங்கத் தொடங்கும்பொழுது மூன்று வகையான சுரப்புநீர் ஊறுவதோடு ஒலி அநுபவமும் ஒளி அநுபவமும் நுகர்ச்சிக்குள் வசமாகின்றன. எனவே யோகிகள் முப்பழம் புசிக்கும் நிலை என்று இதனைக் கூறுவார்கள்.

இந்த முப்பழ நுகர்ச்சிக்கு ஆதாரமாக வேண்டப்படுவது உடம்பின் ஆதார நிலைகள் நன்கு திறந்துவிட வேண்டும் என்ற நிலையே!

இந்த உடம்பிலுள்ள ஆறு ஆதார நிலைகளும் முக்கண் யோகத்திலே மூலக்கனலை எழுப்பிப் பயிலப் பெறும்போது, இந்த ஆதார நிலைகளுக்கு நடுவிலே அடைபட்டுக் கிடக்கும் தடைச்சுவர்கள் கண் திறந்துவிடுகின்றன. அதாவது, இடைச்சுவர்களிலே பலகணிகள் போன்ற திறப்புக்கள் உண்டாகிவிடுகின்றன. இவற்றை எல்லாம் ஞானத் துளைகள் என்று கூறலாம்.

பெருச்சாளி என்ற வாகனம் விநாயகருக்கு அமைந்ததில் ஓர் உருவகம் பொதிந்துள்ளது என்பதைப் பல பெரியோர்கள் விளக்கி இருக்கிறார்கள். மாணிக்க யோகீசுவரரும் சிவயோகியாரும் இன்னும் பல சித்தர்களும் எலியின் இனமாகிய பெருச்சாளியின் துளை தோன்டும் வல்லமையை ஞான மொழியிலே விளக்கியிருக்கின்றார்கள்.

ஞானப் பாதையிலே முன்னேறிச் செல்கிற மாணவனுக்கு ஆதாரச் சுவர்களிலே துளைபோட்டுச் செல்வதே மெய்ந்நெறிக்கு வழியாகும். இந்தத் துளைபோடும் ஆற்றலை மூசிகம் அல்லது பெருச்சாளி என்று உருவகித்தார்கள். ஞானமாகிய ஒளிவடிவம் இந்தப் பெருச்சாளியிலே இவர்ந்து செல்லும்பொழுது 'முப்பழம் நுகரும்' பேரின்பம் கூடுகிறது. இதனை விளக்குகிற இரத்தினசபாபதியாரின் சிவயோக விளக்கம் வருமாறு:

"மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஒவ்வொன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையில் அடைப்பு உள்ளது. சிரசை ஒளி வந்து அடைந்தபோது, இவ் அடைப்புக்கள் எல்லாம் துளைத்தே மேலேறிச் சுழுமுனை நாடியின் உச்சிக்கு வருகிறது".

சிவயோகியாரின் இந்த விளக்கத்தைச் சிந்தித்துப் பார்த்தால் ஞானஒளியாகிய விநாயகர் என்ற உருவகத்திற்குப் பெருச்சாளி என்னும் வாகனம் அமைந்ததன் உட்பொருள் நமக்குப் புலனாகும்.

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டி
தாயா யெனக்குத் தானெழுந் தருளி

இறைவனுடைய ஆற்றல்களை ஆராய்ந்து கண்ட ஞானியர் எல்லாரும், அந்த ஆற்றலின் மாண்பை எத்தனையோ விதங்களில் வியந்து விளக்கியிருக்கிறார்கள். அனைத்து வல்லமையும் ஒருங்கிணைச்த பரம்பொருளை அருவத்திலே கண்டு துய்த்தபோதி